வைக் கௌமாரசபை வெளியீடு.

உ

குருவே துணை.

# குருந்தமலைப் பிரபந்தத் திரட்டு.

✷

ஆசிரியர் :

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

**ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்.**

✷

பதிப்பாளர் :

துடியலூர் (S. I. R.) மணியம்

**திருவாளர் முத்துசாமிக் கவுண்டர்.**

✷

விசு-௵ தை-௴

2. [விலை அணா ஆறு.

சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

உ

குருவே துணை.

# குருந்தமலைப் பிரபந்தத் திரட்டு.

✳

ஆசிரியர் :

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணுக்கர்

**ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்.**

✳

பதிப்பாளர் :

துடியலூர் (S. I. R.) மணியம்

**திருவாளர் முத்துசாமிக் கவுண்டர்.**

✳

விசு-௵ தை-மீ

உரிமை பெற்றது. ] **1942.** [ விலை அணு ஆறு.



ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்,
கௌமாரமடாலயம்,
சிரவணபுரம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

கோவை லண்டன் மிஷின் உயர்தரப் பள்ளியிலும்
நகராண்மை உயர்தரப் பள்ளியிலும் தமிழ்ப் புலமை நடாத்திய
தமிழ் வித்துவான்

## திருவாளர் C. S. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள்

எழுதிய

# முகவுரை.

---

குருந்தாசலப் பதிற்றுப்பத் தந்தாதியையும், திருப்புகழ்ப் பதிகத்தையும் ஆக்கிய சுவாமிகள் இதற்கோர் முகவுரை எழுதுமாறு என்னைப் பணித்தார். அப்பணியை மறுத்தற்கஞ்சி இம்முகவுரையை எழுதலுற்றேன். சுவாமிகள் இக்கோயமுத்தூரையடுத்த சிரவணம்பட்டியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் திருவருணோக்கம் பெற்றவர். துறவொழுக்கம் பெற்றவர். தமிழ்க்கலை பயின்றவர். ஈஸ்வரபக்தியிற் சிறந்தவர். பல நன்மாணாக்கர்க்குப் பக்திமார்க்கத்தை இனிது உபதேசிப்பவர். பக்திச் சுவை ததும்ப இனிய எளிய நடையில் செந்தமிழ்ச் சந்தப் பாக்கள் இயற்றும் ஆற்றல் படைத்தவர். இவர் பாடிய புராணங்களும் பிரபந்தங்களும் பல.

இதுபோழ்து அச்சுவாகனமேறித் தமிழுலகில் உலாக் கொள்ள வருவன குருந்தாலப் பதிற்றுப்பத் தந்தாதியும்,

திருப்புகழ்ப் பதிகமுமேயாம். இவற்றுள் முன்னது தன் பெயர்ப் பொருளுக்கேற்ப நூறு பாக்களைக் கொண்டது. பின்னது பன்னிரண்டு பாக்களைக் கொண்டது.

குருந்தாசலம் என்பது காரமடைப் புகைரத நிலையத்துக்கு மேற்கே மூன்று கல்லில் இருக்கின்றது. இதனைக் குருந்தமலையென வழங்குவர். இது குமரனுடிய குன்றுகளுள் ஒன்று. இம்மலைமீது கலியுகவரதராகிய கந்தக் கடவுள் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர். அங்குச் சிறியதோர் அழகிய ஆலயமுளது. அதில் வீற்றிருக்கும் மூர்த்தி வெகு சிறந்த வேலைப்பாடுடையது. தலவிருக்ஷம் குருந்தமரம். இப்பிரபந்தங்கள் அக்குருந்தாசலக் கடவுள்மீது தோத்திர ரூபமாக அமைந்துள்ளன. பாக்கள் ஆசிரிய விருத்தம் என்னும் பாவினத்தின்பாற்படுவன.

குருந்தாசலப் பதிற்றுப்பத் தந்தாதி நூறு பாடல்களைக் கொண்டது என முன்னர்க் குறிக்கப்பட்டது. பத்துவகை விருத்தவேறுபாடுடையது. வகைக்குப் பத்துச் செய்யுள்கள் உண்டு. ஒரு செய்யுளின் இறுதி வருஞ்செய்யுளின் முதலாக வந்து, இறுதிச் செய்யுளினிறுதி முதற்செய்யுளின் முதலாக வமைந்து மண்டலமாக முடிவது அந்தாதிப் பிரபந்தத்தின் இயல்பு. இந்தப் பிரபந்தத்தில் குழிப்புப்பெற்ற சந்தப்பாக்களும் உண்டு. செய்யுள்களெல்லாம் ஆற்றொழுக்காகச் செல்லுகின்றன. சொல்லலங்காரம்படச் சொற்களும் சொற்றொடர்களும் அமைந்துள்ள பான்மை படிக்குந்தோறும் இன்பம் பயவாநிற்கும். "கையா தளிக்கும் பன்னிரண்டு கையா", "கடையானே னென்றனக் கருள்கட் கடையானே", "திருவரை யெங்கணும் வாசமுற்றநின் வாசமலர்ப் பதம்", "குஞ்சரமுகவன் பின்னெனன்பேன் பிறைமுடித்த

பெருமானுக் கருள்புரிந்த முன்னென்பேன்" என்பன இதற் கெடுத்துக் காட்டாகும். செய்யுள்களில் சைவ நாயன்மார் களுள்ளே சிலரையும், இறைவன் திருவிளையாடல்களுள் சில வற்றையும் தக்காங் கெடுத்துக் குறிப்பிடுகின்றார். சில செய் யுள்களைப் படிக்கும்போது குமரகுருபரர், சிவஞான முனிவர் முதலிய முன்னோரது பிரபந்தச் செய்யுள்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. சிரவணபுரத்து அடியார் குழாத்துள் தம்மை வாழச் செய்வதையே சுவாமிகள் குருந்தாசலக் கடவுள்பால் விரும்பி வேண்டிக்கொள்ளுகின்றனர். இதனை இந்நூலுள் ஆங்காங்குக் காணலாம்.

திருப்புகழ்ப் பதிகம் என்னும் பிரபந்தம் பன்னிரண்டு செந்தமிழ்ச் சந்தவிருத்தங்களானியன்றது. குருந்தமலையில் வீற்றிருக்கும் குமரக்கடவுளின் விழுமிய சிறப்புக்களைப் பல படியாக விதந்து கூறுவது. ஒவ்வொரு செய்யுளும் ஒவ் வொரு சந்தத்தானுக்கப்பெற்றது. "தய்யன" என்னும் குழிப்புப் பெற்ற சந்தம் விரவிய பாடலும் உடையது. இது வும் துதிரூபமாக அமைந்ததே.

இங்ஙனம் பத்திச்சுவை நனிசொட்டும் பாடல்களைக் கொண்ட இனிய எளிய செந்தமிழ் நூல்கள் இன்னும்பல மென்மேலும் இயற்றி மலச்சேற்றில் அழுந்தித் தவிக்கும் உயிர்களை, அதினின்று மீட்டு, துல்லிய அன்புநெறியில் செலுத்தி உய்விக்குமாறு குன்றுதொறாடிடு குமரக்கடவுள் சுவாமிகளுக்குத் திருவருள் பாலிப்பானாக!

"சீர்பூத்த அருட்கடலே கரும்பேதேனே செம்பாகே எனதுகுல தெய்வமே" என்னும் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் அருளுரைப்படி தமது குலதெய்வமாக விளங்கும்

## முகவுரை

ஸ்ரீ குருந்தாசலக்கடவுள்மீது ஸ்ரீமத் சுவாமிகளால் தோத்திர ரூபமாயியற்றியுள்ள இப்பிரபந்தத்தின் பெருமையை யுணர்ந்து மிக்க மனக்களிப்புடனும் அன்புடனும் அச்சிற் பதிப்பித்துப் புத்தகமாக்கி அன்பர்கள் பாடிக்கொண்டாடும்படி உதவிய கௌமாரத்திருவாளர் துடியலூர் மணியம் முத்துசாமிக் கவுண்டரீவர்களுக்கு ஸ்ரீ குருந்தாசலாதிபன் திருவருளால் இகபர சுகபோக பாக்கியங்கள் அனைத்தும் எய்துமாறு, அன்னவன் பொன்னடித் துணைகளைப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்.

இகபர சுகத்தை நாடுவோர்க்கு இப்பிரபந்தத்தை நியமமாக ஓதிவருவது தாம் நாடியபொருள் கைகூடப் பெறுதற்குச் சிறந்த சாதனமாம் என்பது திண்ணம். சைவ உலகில் இவை எங்கும் வியாபித்து நலம் பயக்குமாக!

அறுசீர்க் கழிநெடில்.

வான்றடவுங் குருந்தவரை வாழ்குமரன்
செம்பதும மலர்த்தாட் கன்பின்
சான்றெனவோர் பதிற்றுப்பத் தந்தாதி
யோடினிய சந்தப் பாவா
ஞன்றபதி கமுந்தந்தான் சிரவைக்கௌ
மாரமடத் தமர்வோன் தூய்மை
சான்றதமிழ்ப் புலவர்புகழ் சாமிகந்த
சாமியெனுஞ் சதுரன் மாதோ.

கோயமுத்தூர்,
30—12—1940.

இப்படிக்கு,
**சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.**

உ
குருவே துணை.

# சாத்து கவிகள்.

சிரவணபுரம் கௌமார மடாலயம்
ஸ்ரீ தெண்டபாணி சுவாமி பூசைப்பணியினர்
**சின்னச்சாமி சுவாமி இயற்றியன.**

கட்டளைக்கலித்துறை.

வண்ணச்சரப னருளிராமானந்த வள்ளல்பொற்று
ளெண்ணத் தவக்கந்தசாமி குருந்தவெற் பின்கண்வள
ரண்ணற்கணிபதிற் றுப்பத்தந்தாதி யணிகொள்சந்தம்
வண்ணக்கடம்பிசை தேனூறுமின்ப வளத்தினவே. (க)

கண்ணியந் தோய்பிர பந்தங்கௌமாரர் களித்திசைப்பப்
புண்ணியப் பொன்கொடச் சிட்டுவந் தீந்த புதுமையினுல்
மண்ணியல் சீர்த்துடி சைப்பதியாட்சி மணியமிசை
திண்ணியமுத்துச் சுவாமியிகபர சீர்த்தியனே. (உ)

---

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளின் மாணுக்கரும்
கௌமார மடாலயம் சபாலய பூசைப்பணியினருமான
**இரங்கமுத்து ஐயா இயற்றியன.**

கட்டளைக் கலித்துறைகள்.

காரார்பொழில்சூழ் பொதிகைமுனிதன் கலைகொடிந்தப்
பாரார்புகழ்தோய் சிரவைராமானந்தப் பானுவின்கண்
ஏரார்மகிமை யிசைகந்தசாமியெ மேந்தல்வண்ணத்
தாரார்சொல்காவிய மேகப்பாசந்தப்பா தந்தவனே. (க)

கதிமணங்காட்டும் குருந்தைதமலேவாழெங் கந்தனுக்குத்
துதிமணங்காட்டும் பதிற்றுப்பத்தந்தாதி தூயசந்தம்
விதிமணங்காணுது ஞாலத்தில்மேன்மேன் மிகமகிழ்ந்தே
பதிமணங்காட்டிவிண் ணோர்மெச்சுமேலாம் பதந்தருமே.(உ)

---

இந்நூலாசிரிய சுவாமிகள் மாணக்கர்
சிரவணபுரம் கௌமார மடாலயம் புட்பப்பணி
## குமாரசாமி ஐயா இயற்றியன.

வெண்பாக்கள்.

தேசார்சிரவைநகர் சேர்தருராமானந்த
வாசான்கடைக்கணரு ளாற்புவியிற் — கூசாமற்
பாப்பொழியெங்கந்தகுரு பாவலருநாவலருங்
கோப்பொடென் றுந்தோத்தரிக்குங் கோன். (க)

குருந்தமலேமேவுங் குமரகுருமீதி
லருந்தமிழ்ப்பாவாரமிழ்தை யன்பர் — விருந்துசெய்தே
யிப்புவியிலுய்யவைத்தா னின்பமுடனேற்றிதனைச்
செட்புவதுநந்தவம தே. (உ)

---

இந்நூலாசிரிய சுவாமிகள் மாணக்கர்
சிரவணம்பட்டி
## பாப்பையா என்கிற மருதாசல ஐயா இயற்றியன.

வெண்பாக்கள்.

இம்பரும்ப ரேத்திடுசீ ரேய்ராமா னந்தப்பேர்க்
கும்பனடி நம்பிநிதங் கும்பிட்டுத் — தெம்பமையெங்
கந்தமுனி பொன்னடியிற் கந்தமலர் பெய்தேத்திச்
சிந்தனேசெய் துய்வேன் றினம். (க)

வாசமுரு கோன்கலையாய் வந்தகந்த சாமியெந்தை
பேசருமைச் சீர்கள் பிறங்குகுருந் — தாசலப்பாக்
கற்பவர்கள் வேட்கையளி கற்பகமோ முக்கனியோ
வற்புதத்தி லற்புதமம் மா. (உ)

விற்பனர்கள் மெச்சுகவி வேந்துகந்த சாமியண்ணல்
கற்பனையி லற்புதமாய்க் கட்டுமிந்நூல் — கற்பவர்கள்
நாற்றிசையர் போற்றிசையிந் நாட்டினிலே நாட்டியம்மைப்
பேற்றிசைவா ரெய்தார் பிறப்பு. (ங)

---

இந்நூலாசிரிய சுவாமிகளின் மாணுக்கர்
சிரவணம்பட்டி

## தம்பி என்கிற மருதாசல ஐயா இயற்றியது.

### சந்தக்கவி.

தனதான தத்ததந்த தாத்ததாந்த தன்னதய்ய — தனதானு.

திருமாத வத்தொழும்பர் கூட்டம்வேண்டல் பன்னவல்ல
பிரமாவி னுக்ககந்தை போக்குமாண்பு துன்னுகைகொள்
சிரவாபு ரத்தர்கந்த மூர்த்திசாந்த மன்னுசெய்ய —
நெறியாளர்

மருவாரி சப்பதங்க ளேத்தினீண்ட வின்னல்கெல்வி
யருளான தைத்தரும்பல் பாட்டுவேந்தர் சொன்னசெய்யுள்
வகையா யிரத்திலின்று வேற்கொள்சேந்தன் மன்னிவைகு —
கிரியாகுந்

தருவார்ம லைக்குருந்த மாட்சியோர்ந்து பன்னுதுய்ய
பொருளா ரிசைப்ரபந்தம் வாக்குவாய்ந்த தன்யர்மெய்மை
தவரூர்ப டித்துவந்து போற்றவேண்டி நன்மைபல்கு —
பொருளாலே

பொருவாத புத்தகங்க ளாக்கியீந்த தன்மைகொள்து
டியலூரி னிற்சிறந்த வாழ்க்கையேந்தல் பொன்னிலெய்து
புகழ்மேன்மை யுற்றதன்பர் வாழ்த்தவாழ்ந்து நன்மையெய்தி
— டுகமாதோ.

---

கோவை ஸ்ரீ இராமானந்த வைத்தியசாலை

## K. R. சின்னப்ப செட்டியார் இயற்றியன.

வெண்பாக்கள்.

கொங்குலவுஞ் சோலைக் குருந்தா சலமேய
நங்குமரன் ருட்கணியா நாட்டினுன் — மங்களமாய்ச்
சந்தக் கவியுடனே சாரும் பதிற்றுப்பத்
தந்தாதி தோத்திரங்க ளால். (க)

மண்பெண்பொன் நானென்னு மாயை மயக்காது
திண்ணமெனை யாண்ட சிரவைநகர்ப் — பண்ணவனும்
சீராமா னந்தனடி சிந்தனைசெய் கந்தசாமிப்
பேராளன் கூறும்பாப் பேறு. (உ)

---

தேவராயபுரம் ந. இராமசாமிக் கவுண்டர் குமாரன்

## திரு. ந. ரா. இராமசாமிக் கவுண்டர் இயற்றியன.

வெண்பாக்கள்.

பத்தியற்ற பாவியர்க்குப் பற்றுவிடப் பார்வையருள்
முத்தன் முனியா முனிராசன் — சித்திபெரு
மெந்தண்ட பாணிக் கினியனிரா மானந்தன்
றந்தகந்த சாமித் தவன். (க)

பண்படு மென்குரற் பாவையர் காவியங்
கண்படாத் தேவகௌ மாரனே — விண்படுந்
தெய்வத் தருச்சிரவை சேர்சபையின் மீதிசைவான்
சைவந் தழைத்திடவே தான். (உ)

மருந்தனைய மாணிக்க வாசகன்பே ரின்பக்
குருந்தமலைத் தோத்திரமாக் கூட்டும் — விருந்திதனை
யுண்டாற் பிறவி யொழியு மெனுமுண்மை
கண்டாரெங் கௌமாரர் காண். (ங)

---

கோ. தா. கணபதியிலிருக்கும் கிருஷ்ணய்யர் குமாரன்

## G. K. இராமஸ்வாமி இயற்றியன.

### நேரிசை வெண்பாக்கள்.

கஞ்சமலர்த் தண்ணீர்க் கயங்களும் வண்டினங்க
டுஞ்சுகின்ற பூந்துணர்த்திஞ் சோலையுஞ்சூ — ழஞ்சிரவை
யெந்தையிரா மானந்த வேந்தலருள் பெற்றுயர்ந்தோன்
கந்தசா மிப்பேர்க் கவி. (க)

திருவார்நற் கொங்கிற் றிகழ்குருந்த வெற்பின்
மருவார் திருக்கடப்ப மாலைப் — பெருமான்மேற்
கண்டனைய தண்டமிழைக் கந்தசா மித்தவர்கோ
விண்டனரு மின்பெய்த வே. (உ)

பரவையன்பாற் பத்தர் பவமறுக்கு ஞான
வருணகந்த சாமிகவி யாக்குங் — குருந்தா
சலப்பிரபந் தத்தையிங்கு சாற்றுமன்பர்க் குண்டா
நலமிருமை யூடு நனி. (ங)

---

கோயமுத்தூர் கணபதி பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர்

## R. திருமலை அய்யங்கார் அவர்கள் இயற்றியன.

வெண்பாக்கள்.

*பந்த வினைதீர்ப்பான் பண்பார் சிரவைநகர்*
*வந்த வொருவனென மாநிலநாள் — வந்திக்கு*
*நந்தமிரா மாநந்த நாத னுடன்பிறந்தோன்*
*தந்தகந்த சாமித் தவன்.* (க)

*தவரெனப் பற்பலரித் தாரணியி லிஞ்ஞான்*
*றவமே யலைவர்நா னென்னக் — குவடனைய*
*கந்தசா மித்துறவோன் கைத்தொழித்த கன்மத்தோ*
*னிந்தமண்ணி வற்கிணை மிக் கின்று.* (உ)

*நாத்திகப் பேயிரிய ஞான மதுவிரிய*
*வாத்திகத் தார்சேர்ந் தருந்துதற்குப் — பாத்துக்*
*குருந்தா சலத்தமருங் குன்றுடு வான்பா*
*விருந்தா வளித்தான்பார் மீது.* (ங)

---

சிரவணபுரம் கௌமாரசபை அடியவர்களிலொருவராகிய
விளாங்குறிச்சி—பெரியதோட்டம்

## சுப்பண கவுண்டர் இயற்றியது.

அறுசீராசிரிய விருத்தம்.

*பந்தமெனும் பிணியில்லான் பரமகுரு பரனடியுட் பதித்துநாளுஞ், சிந்தனைசெய் கந்தசா மிப்பெரியோன் குருந் தவரைச் செவ்வேட் கன்பாற், றந்தபதிற் றுப்பத்தந் தாதிசந் தப் பதிகமதைச் சகத்தோர் போற்றச், சந்தமுறு மச்சிட்டான் றுடிசைநகர் மணியமுத்துச் சாமியம்மா.*

---

கோயமுத்தூர் — விளாங்குறிச்சி, நூலாசிரியர்

## வி. நா. மருதாசலக் கவுண்டரவர்கள் இயற்றியன.

நேரிசை வெண்பாக்கள்.

அவிச்சரபர் கூற்று யவதரித்த மாதைக்
கவிச்சரப தேசிகனுர் கண்ணேக் — குவிச்சை
இராமானந் தன்பரனென் றேத்துகந்த சாமி
பராவுகுருந் தைத்துதிதேன் பாகு. (க)

அருந்தமலை பால்வாய்க் குழந்தைவே லப்பன்
குருந்தமலை யாண்டவனைக் கும்பிட் — டருந்தமிழால்
தோத்திரங்கள் பெய்தான் சுகுணகந்த சாமியருட்
சாத்திரங்க ளைப்பிழிந்து சாறு. (உ)

பலமூர்த்தி காட்டும் பரங்குருவைக் கூட்டும்
குலமூர்த்தி வேற்கைக் குருந்தா — சலமூர்த்தி
காலை யலங்கரித்த கந்தசா மித்தவன்பா
மாலையலங் கார மணம். (ந)

பெற்றுளே பெற்றுள் பிறர்நகைக்க வென்னுமல்
கற்றூர்பற் றற்றுருங் காதலிப்பர் — சுற்றூர்
பொழிற்சிரவைக் கௌமார போதகா சார்ய
எழிற்கந்த சாமிகவி யேற்று. (ச)

மூர்த்திதலந் தீர்த்த முறைவிளங்குந் தைப்பூசத்
தேர்த்திருவி ழாவுந் திகழுமன்பர் — பார்த்திறைஞ்சிக்
காவடிகொண் டாடிமகிழ் காட்சிமலி யுங்குருந்தைப்
பாவடிகொண் டாடல் பயன். (ரு)

விருந்தீசற் கோங்காரம் விண்டகுரு நாத
குருந்தீசன் ஞேத்திர நூல் கொண்டு — திருந்தச்சிட்
டந்தமுத்து சாமிவள்ள லெந்துடிய லூர்மணியன்
மாந்துகமெய் யின்பமிக்கு வாழ்வு. (௬)

---

திருவாமாத்தூர் கௌமார மடாலயம்

## தி. மு. செந்திநயகம் பிள்ளை அவர்களியற்றியன.

வெண்பாக்கள்.

குருந்தவரைச் செவ்வேள் குளிர்மலர்த்தாட் கன்பாற்
பொருந்து சிரவைப் புரம்வாழ் — மருந்தனைய
கந்தசா மித்தவன்சொல் காட்டுசந்த முஞ்சுவைக
சிந்தபதிற் றந்தா தியும். (௧)

பத்தர்பலர் போற்றிப் பயனடைவா னச்சியற்றிப்
புத்தகமா நல்கிப் புகழ்படைத்தான் — சித்தஞ்
சிறந்தமுத்துச் சாமிகுண சீலன் றுடிசை
யறந்தழையத் தோன்று மவன். (௨)

---

சிரவணபுரம் கௌமாரசபை அடியவர்களிலொருவராகிய
சின்னமேட்டுப்பாளையம்

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஐயா இயற்றியது.

வெண்பா.

எங்குருவாம் கந்தமுனி யேற்றபதிற் றுப்பத்தால்
பொங்குகுருந் தாசலனைப் போற்றியுய்ய — இங்குதந்த
நன்மையினை யுன்னியுன்னி நாடோறு நாம்துதிக்கில்
புன்மைதவிர் வாழ்விருப் போம்.

---

கௌமாரசபையடியவரிலொருவராகிய சின்னமேட்டுப்பாளையம்

## திரு. ஜானகியம்மாள் இயற்றியது.

வெண்பா.

எந்தையாங் கந்தநாத னீன்றபதிற் றுப்பத்தால்
சந்தக் குருந்தா சலனையன்பில் — வந்திக்கில்
தண்டொடுவே லேந்திடுகைச் சற்குருவைக் கண்குளிரக்
கண்டுவந்து தோய்வோம் கதி.

---

பவானி, போர்டு உயர்தரப் பாடசாலை ரிடையர்டு தமிழாசிரியர்

## சைவத் திருவாளர் கு. குமாரசாமிப் பிள்ளை அவர்கள்

இயற்றிய

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திங்களங் குழவி தவழ்சிக ரத்துச் செழுங்கிரி தொறுந் துதி செம்மை, தங்கிய வுயர்வுத் தவமுடை யடியார் தண்ணிய வுளத்தினுந் தங்குந் துங்கவேற், கரத்தெஞ் சுடர்ப்பதப் பெருமான் றுலக்கிடு திருவருள் பெற்றுப், பங்கமி றண்டபாணியென் றுரைக்கும் பண்புடைக் குரவன்ரு டுதிப்போன்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள்.

திருக்கருவூர் முதலாய சிவதலங்கள் பலவிளங்கிச் செல்வே டங்குந், தருக்குலங்க ணிறைபொருப்பு மெண்ணிறந்த நிறைந்துதிருத் தங்குங் கொங்கிற், றிருக்குருந்த மலைக் குருந்தின் றிருவடிக்குப் பதிற்றுப்பத் தன்றிச் செய்ய, கருத் தொன்று சந்தப்பாப் பலவுமுளங் களிதூங்கக் கழறி னுனல்.

அன்னுன்யா ரெனின்முன்ன மருங்கலைநூல் பலவு ணர்ந்தே யன்னி யூர்க்கும், முன்னேன்பே ரருள்சுரக்குங் கவசைநகர் தனக்குமுனம் புராணஞ் சொன்னேன், சொன் ஞனச் சுவைக்குமெழிற் கவிதைபல துரிதமொடு சொல்லிக் கம்பன், பின்ஞனச் செயுந்திறமைக் கந்தசா மிப்பெயர்கொள் பெரியோ னம்மா. (உ)

சிரவணமா புரமடத்துச் செம்மல்சொலிவ் வந்தாதிச் செய்யு ணூலைக், கரவணவா வுளத்துமுத்துச் சாமியெனுங் கனதனவான் கல்வி வாய்ந்தோன், அரவணவா பரணமணி யரனம்பி யாரூரர்க் கடகை யிட்ட, பரவணமாந் துடிசை நகர் தனில்வாழ்வோன் அச்சியற்றிப் பயன்பெற் ருனே. (ங)

---

செட்டிபாளையம்

## R. N. கல்யாணசுந்தரம் அவர்கள் இயற்றிய

வெண்பா.

குருந்தமலைக் கந்தனுக்குக் கூறு பிரபந்த
விருந்ததனைச் செய்ததிரு வேந்தல்—அருந்தவத்துக்
கந்தசா மிப்பெரியன் காட்டுகிற வீட்டுநெறி
பந்தபா சந்தவிர்க்கும் பார்.

---

## தெய்வமே துணை.



ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,

கௌமாரமடாலயம்,

சிரவணபுரம்.



உ

குருவே துணை.

# குருந்தாசலப் பதிற்றுப்பத் தந்தாதி.

## காப்பு.

கட்டளைக் கலித்துறை.

கொப்புந்து சோலைக் குருந்தா சலத்திருக் கோயிலருள்
வைப்புந்து சீர்க்கும ரேசன் பதத்தின் மகிழ்ந்தணியச்
செப்புந்து திப்பதிற் றுப்பத்தந் தாதி சிறந்துமுற்றத்
துப்புந்து சீலரா மானந்த நாதன் றுணைநமக்கே.

# நூல்.

## வேறு.

பூமேலயனுக் கறிவரிய புனிதமறையின் முதற்பொருளைச்
சேமேலவருக் கருள்புரிந்த செல்வாஞானச் செழுஞ்சுடரே
தேமேவியம்பூம் பொழிற்குருந்தச் சிலம்பாசிலம்பு புலம்புகழற்
கோமேதகமே செப்பவளக்குன்றே குறைதீர்த் தருள்வாயே.

வாயாலுனது புகழ்பாடி மனத்தானினைந்து பரவசமுற், றேயாமழையொத் திருவிழிநீ ருகுக்கும்படியென் றுகந் தருள்வாய், தாயாய்த்தந்தை யாய்ஞான சரதக்குருவாந் தனித் தலைமைத், தூயாகுருந்த வரையிடத்திற் றுலங்குங்கருணைச் சுடர்மணியே. (உ)

சுடரேயுனையென் னுளத்தமைக்கத் துணியேன் வஞ்சப் பவவிருளி, லிடரேபொருந்தி யிளைக்கின்றே னெரிவாய்நரகிற் புகுத்திமிகப், படரே புரியுங் கொடுங்கால படருக்கென்னே பகர்ந்திடுவேன், றொடரேயணியார் குருந்தவரைத் துரையே கலபத் தோகையனே. (ங)

கையார்தளிக்கும் பன்னிரண்டு கையாமனத்தைக் கலக் குமிடர்ப், பொய்யாமுலகிற் படுமடியேன் புழுக்கமறிந்தும் பொருவிலருள், செய்யாதிருந்தா யீதறமோ செப்பாய்வைப் பாய்த் திகழ்குருந்தச், சையாமெய்யா கடப்பமலர்த் தாராய் வாராய் சளங்கெடவே. (ச)

சளங்கொண்மாயப் புலன்வழியிற் சாராதருளாற் றவமிலி யென், னுளங்கொண்மணியே பேரின்ப வூற்றேமாற்றே றிய

பொன்னே, வளங்கொள்குருந்த வரைக்கோயில் வாழ்வே வானோர் வாழவிடங், களங்கொள்பரம னங்கிநுதற் கண்ணின் முளைத்த கற்பகமே. (ரு)

கல்லாமனத்தேன் கல்லாத கடையேனெனினு முன்ன ருள்கொள், நல்லாதரத்தொண் டன்பரென நடித்தேனெனைநீ நயவாமே, பொல்லா தவனென் றகற்றிலருள் புரிவாரெவரே யஞ்சலெனச், சொல்லாய்மாபா தகற்கருள்வோன் றொழுந் தாட்குருந்த வரைச்சுகனே. (சு)

வரைமுற் றவுஞ்சென் றுனதுபுகழ் வரையற்றிடவே பொழிந்துலவாக், கரையற் றியல்பேரின்பநெடுங் கடன்மூழ் கிடவென் றருள்புரிவாய், புரையற்றியன்மா தவமுனிவர் போற்றக்குருந்தப் பொருப்பினிடை, யுரையற்றுணர்வற் றுயி ரறும்பே றுதவுங்கடைக்கண் ணுடையானே. (எ)

உடையானேதுன் பமரருறு தொழித்தவெற்றி யொளிர் வடிவேற், படையானேயொன் பானிலக்கர் படையானே பொய்ப் பவநடையிற், கடையானெனென் றனக்கருள்கட் கடையானேவண் குருந்தவரைப், புடையானேநின் றனைத் தொழுவார்ப் புடையானெமனெப் போதினுமே. (அ)

போதுகரங்கொண் டுன்சரணப் போதுபணிந்து போற் றுமன்பர், மீதுகருணை பொழிகுருந்த வெற்பார்முகிலே வினைக்கொடியே, னேதுமறியேன் கதியருள்வா யென்றுன் சமுகத் திரக்கின்றேன், கோதுதவிர்மெஞ் ஞானவிழி கொடுப் பாய் கெடுப்பாய் குறைகளையே. (கூ)

குறையாக்கருணைப் பெருங்கடலே கோடாகோடி யான விசை, மறையாகமங்கொ ளுரைக்கடங்கா மறையேமறையா

மணிவிளக்கே, நிறையாதரத்தொண் டரைவிழுங்கி நிலவுஞ் சுகமே குருந்தவரை, யுறையாதவனே சரணெனக்குன் னுபய பதந்தந் தருள்வாயே. (கo)

வேறு.

தந்திமாமுகவற் கிளையனையிளையாத் தவங்கொள்சந்தன வரை முனிவன், புந்திகொண்டருளும் பாதனைமலர்வாழ் போதனைக்குட்டியா ணவநோய், சிந்திடவருள்செய் குரவனைக் குருந்தச் சிலம்பனை நலம்பெற நினைவா, ரந்திவான்மதியச் சடையமைந்தமர ரலர்பொழிந் தேத்தவாழ் குவரே. (கக)

வரையருங்கானத் தமைந்திலையருந்தி மரவுரி தரித்து வார்சடைக, ணிரைபெறவளர்த்து நாசியில்விழிக்கு நிலைமை யர் தமக்கமை குவதோ, திரையறுகடனேர் மனத்தினுட் குருந்தச் சிலம்பனை யிருத்துமெய்த்தொண்டர், விரைமலர்ப் பதந்தோய் தொண்டருக்குரித்தாய் விளங்குபூரணப்பர சுகமே. (கஉ)

சுகவடிவாகத் துதித்தபாவலற்கத் தூலமுற்றமைதர நல்கி, முகவடிவமைந்த பிரமமாமொருவன் முன்னுபுமுகங் கவிழ் தரவே, தகவடிவேற்கொள் புயமிசையுலவத் தருகுருந் தாசல விறைவன், மிகவடிதமிழா லேத்துநர்மேற்கொள் விர கினுக்குவமை விள்ளரிதே. (கங)

விளம்பருமகிமை யமைந்தநின்பெருஞ்சீர் விண்டுபோற் றிடு பெருங்காத, லுளம்பொலி தமியே னென்னையிவ்வுலகத் துண்டுடுப்பவருடன் கஞ்சத், தளம்பொலிபுனலி லலமர விடுத்த தன்மைநின்றயைக்கடுப் பதுவோ, வளம்பொலி குருந்த வரைத்திருக்கோயில் வயின்றிகழ் சற்குருமணியே.

மணிமுடிபுனைந்தைந் தாருவினிழலில் வானவர்வந்தனை புரிந்து, பிணியவிழ்மலர்தூய்த் துதித்திடவிளங்கும் பெருமையிற் களிப்பவர் பமரத், தணியிசைப்பொதும்பர்க் குருந்தவெற்பிறையுன் னடியர்தாட்டுகள்சிரத் தமைக்கத், துணிகிலார் பரிகொல் கயவர்களெனினுன் றொண்டர்சீர் சொச்சமாமறைக்கே. (கரு)

மறைகள்பல்கோடி முகங்கொடுதுதித்தும் வாய்மைதேறுதசெம் பொருளே, தறைமிசையுயிர்க ளுய்ந்திடவருளாற் றடித்தணிக்குருந்தவெற் புச்சி, யுறைகுமராநின் மகிமையென்போதத் துணர்ந்துரைத் திடற்கெளி தோமெய்ச், சிறையொழித்தருள வேண்டிவிண்ணப்பஞ் செய்வதல்லாதுநாயேனே. (கசா)

நாயினிற்கடையா நமைப்பொருட்படுத்தி நாதமாமுடித்தலை யமைப்பத், தாயினிற்சிறந்து தழைத்தருள்குருந்தா சலனடிமறந்துபொய்ச் சகத்திற், பேயினின்மடவார் பொன்விழைந்திழிபுன் புலன்புகுந்துழன்மட நெஞ்சே, நீயினுஞ் செத்தி லாயிருந்தனையா னிரயமே லெனைப்புகுத்திடவே. ()

திடர்பெறவமரர் மலர்பொழிந்தனர்துத் தியஞ்செயக் குருந்தவண் சிலம்பிற், படர்தருமெய்க்கௌ மாரர்கள்பவஞ்சால் படரொழித்துனைப்பெறப் பவத்தே, னிடர்மதனலர்பட் டரிவையர்குயக்குன் றிவர்ந்திருட்கும்பியென் றிசைக்குங், குடர்பொதிநிரயம் புகவலித்தனனென் கோதறுத்தருளருள் கூர்ந்தே. (கஅ)

கூரியன்ஞான சத்திகொண்டவிச்சை குலைத்துமெய்க் கதியினிற் கூட்டச், சீரியற்குருந்தா சலமிசைவதியுந் தேவ

மணிவிளக்கே, நிறையாதரத்தொண் டரைவிழுங்கி நிலவுஞ் சுகமே குருந்தவரை, யுறையாதவனே சரணெனக்குன் னுபய பதந்தந் தருள்வாயே. (க0)

வேறு.

தந்திமாமுகவற் கிளையனையிளையாத் தவங்கொள்சந்தன வரை முனிவன், புந்திகொண்டருளும் பாதனைமலர்வாழ் போதனைக்குட்டியா ணவநோய், சிந்திடவருள்செய் குரவனைக் குருந்தச் சிலம்பனை நலம்பெற நினைவா, ரந்திவான்மதியச் சடையமைந்தமர ரலர்பொழிந் தேத்தவாழ் குவரே. (கக)

வரையருங்கானத் தமைந்திலையருந்தி மரவுரி தரித்து வார்சடைக, ணிரைபெறவளர்த்து நாசியில்விழிக்கு நிலைமை யர் தமக்கமை குவதோ, திரையறுகடனேர் மனத்தினுட் குருந்தச் சிலம்பனை யிருத்துமெய்த் தொண்டர், விரைமலர்ப் பதந்தோய் தொண்டருக்குரித்தாய் விளங்குபூரணப்பர சுகமே. (கஉ)

சுகவடிவாகத் துதித்தபாவலற்கத் தூலமுற்றமைதர நல்கி, முகவடிவமைந்த பிரமமாமொருவன் முன்னுபுமுகங் கவிழ் தரவே, தகவடிவேற்கொள் புயமிசையுலவத் தருகுருந் தாசல விறைவன், மிகவடிதமிழா லேத்துநர்மேற்கொள் விர கினுக்குவமை விள்ளரிதே. (கங)

விளம்பருமகிமை யமைந்தநின்பெருஞ்சீர் விண்டுபோற் றிடு பெருங்காத, லுளம்பொலி தமியே னென்னையிவ்வுலகத் துண்டுடுப்பவருடன் கஞ்சத், தளம்பொலிபுனலி லலமர விடுத்த தன்மைநின்றயைக்கடுப் பதுவோ, வளம்பொலி குருந்த வரைத்திருக்கோயில் வயின்றிகழ் சற்குருமணியே.

மணிமுடிபுனைந்தைந் தாருவினிழலில் வானவர்வந்தனை புரிந்து, பிணியவிழ்மலர்தூய்த் துதித்திடவிளங்கும் பெருமையிற் களிப்பவர் பமரத், தணியிசைப்பொதும்பர்க் குருந்தவெற்பிறையுன் னடியர்தாட்டுகள்சிரத் தமைக்கத், துணிகிலார் பரிகொல் கயவர்களெனினுன் றொண்டர்சீர் சொச்சமாமறைக்கே. (கரு)

மறைகள்பல்கோடி முகங்கொடுதுதித்தும் வாய்மைதேறுதசெம் பொருளே, தறைமிசையுயிர்க ளுய்ந்திடவருளாற் றடித்தணிக்குருந்தவெற் புச்சி, யுறைகுமராநின் மகிமையென்போதத் துணர்ந்துரைத் திடற்கெளி தோமெய்ச், சிறையொழித்தருள வேண்டிவிண்ணப்பஞ் செய்வதல்லாதுநாயேனே. (கசா)

நாயினிற்கடையா நமைப்பொருட்படுத்தி நாதமாமுடித்தலை யமைப்பத், தாயினிற்சிறந்து தழைத்தருள்குருந்தா சலனடிமறந்துபொய்ச் சகத்திற், பேயினின்மடவார் பொன்விழைந்திழிபுன் புலன்புகுந்துழன்மட நெஞ்சே, நீயினுஞ்செத்தி லாயிருந்தனையா னிரயமே லெனைப்புகுத்திடவே. ()

திடர்பெறவமரர் மலர்பொழிந்தனர்துத் தியஞ்செயக்குருந்தவண் சிலம்பிற், படர்தருமெய்க்கெள மாரர்கள்பவஞ்சால் படரொழித்துனைப்பெறப் பவத்தே, னிடர்மதனலர்பட்டரிவையர்குயக்குன் றிவர்ந்திருட்கும்பியென் றிசைக்குங், குடர்பொதிநிரயம் புகவலித்தனனென் கோதறுத்தருளருள்கூர்ந்தே. (கஅ)

கூரியன்ஞான சத்திகொண்டவிச்சை குலைத்துமெய்க் கதியினிற் கூட்டச், சீரியற்குருந்தா சலமிசைவதியுந் தேவ

தேவேசிவ குருவே, பேரியன்மறைகட் கெட்டருநின்சீர் பேசியேத்திடவென்மேற் கருணை, கூரியல்புறுநிற் கேதுகை மாறு குறித்துனைத்துதிப்பதல் லாதே. (க௯)

அல்லினுள்ளொளியைப் பெறமுயன்றெய்க்கு மந்தகன் போற்பகை யாகி, மல்லிடுமாயப் புலன்புகுந்தின்ப மருவவேட் டுழன்மதி யிலிக்கு, நல்லியன்ஞான விழியளித்துன்ற ணயங் திடப்புரிவதுன் பரங்காண், செல்லிரும்போர்வை கொண்டு மாலென்னத் திகழ்குருந்தாசலத் தேவே. (உ0)

வேறு

தேவர்போற்றுசே னபதியாகிமுன் செழுங்கட லிடை சேர்சூர், மாவடுங்கதிர் வேல்கொடு குருந்தமா மலைமிசை நின் றேய்நின், சேவடித்துணை கருதுமென்னுவியைத் தியக்கு மைம் புலவஞ்சப், பாவநீக்கவுட் கருதிடாய்விந்தையிற் பார்த் திட லழகன்றே. (உக)

அழற்றும்வெங்கதிர்ப் பாலையினிடைகிடந் தயருமென் புழுவேபோற், சுழற்றுமைம்புலக் காதலுட்பட்டுளந் துடிக்கு மென் றனைநின்பொற், கழற்றுணைக்கணே சேர்ந்திடவருள்வ தெக் காலமோ பைந்தோகை, நிழற்றுமஞ்ஞைமேற் குருந்த மாமலைமிசை நின்றிலங்கியதேவே. (உஉ)

நிற்பதொத்தரைக் கணத்தொழிகருமுகி னிழலையம் புலமாயைச், சொற்பனத்தினை நிகருடனிலையெனச் சூழ்ந் தருட் குருந்தேசன், பொற்பதத்தினை மறந்தனையவத்தினுள் போக்கினையுனைக்காலன், முற்பகட்டில்வந் தனன்கொள்காற் றுணையெவர் மொழிகுதி மடநெஞ்சே. (உ௩)

நெஞ்சமேன்மலர் மணமெனத்திகழ்சுக நிலைக்குருந் தேசாநின், கஞ்சநாண்மலர்ப் பதம்விடுத்திகத்துயர் காதலித் தனனின்பப், புஞ்சமாரமு தினையெறிந்தேபணிப் புற்றவாய்ப் புகுந்தின, நஞ்சவாவுந ரொத்தனன் கான்றுணும் ஞாளியிற் கடையேனே. (உச)

கடைந்த வேற்கருங் கண்ணியரவயவக் கட்டழகினைக் கண்டே, யுடைந்தழற்படு மெழுகையொத்துருகுமென் னுள் ளம்வண் டினமாரக், குடைந்துழக்கிய கடம்பணிதிண்புயக் குருந்தவெற் பிறைநின்றுட், கடைந்திடும்படி கருணைசெய் குதிவிரைந் தஞ்சலென் றெதிர்வந்தே. (உரு)

அஞ்சமார்மலர்த் தடம்பொலிகுருந்தவெற் பமரயிற் கரத்தோய்நின், கஞ்சநாண்மலர்ச் சரண்சரணென்றுளங் கரு திடு மடியேனை, யஞ்சலென்றுவந் தருள்வையோமாயவாழ் வதனில்வீழ்த் திடுவாயோ, தஞ்சநாயக நின்பரமென்சுதந் தரமொன்று மின்றின்றே. (உசா)

இன்றுநின்றிருப் பாதபங்கயத்தெனக் கிடையறு மெய்ப் பத்தி, யென்றுவாடுவ தறியுநின்னுள்ளநம் மிறைவனீ குவ னென்ன, நன்றுநாடின னுற்றுளனீயெது நாளினல் குவை கொல்லோ, குன்றுருவளம் பொருந்தியற்குருந்தவண் குன் றிடை நின்றோனே. (உஎ)

நின்மலச்சிவ யோகியர்தம்முள நிலைமைநின் பதம்போற் றுக், கன்மனத்தினே னெவ்வகையெய்துவேன் கடையனேன் பிழையுன்னி, வன்மமெண்ணிடே லடைக்கலமெய்யருள் வாழ்விடை புகவுய்ப்பாய், தன்மநாயக குருந்தமாமலைத்திருத் தளிகொள்சண் முகவேளே. (உஅ)

வேள்செலுத்திடு மலர்க்கணைநாயினேன் மெய்யிடை புகுதாதுன், றுள்செலுத்திய மனக்கவுமாரர்தஞ் சபையினுள் ளமர்ந்தோநன், ஞள்செலுத்திட விழைந்தனனவ்வர நல்குதி மதிவெய்யோன், வாள்செலுத்திடாப் பொழில்பொலிகுருந் தமா மலைப்பெரு வாழ்வோனே. (உகூ)

வாழ்வதாகவுந் தாழ்வதாகவும்புரி வஞ்சவைம் புலத் தூடே, வீழ்வதற்றமெய்ப் பேருணிலைமைகொள் விற்பனக் கவுமாரர், கேழ்வயங்குதாட் டுணைசிரத்தணிந்தவர் கேடில் வாழ் வென்றேய்வேன், சூழ்வளம்பெறு முல்லைசூழ்குருந்த வான் குவட்டறு முகவேளே. (௩0)

வேறு.

குவடு தன்னையொக் குங்கடி னத்தினு
னுவமை யாமென் னுளந்திரு மாலயன்
சிவனு மேத்தத் திகழ்குருந் தாசலன்
சுவண பாதத் துணைக்குரித் தானதே. (௩க)

ஆனை தேர்பரி யாதிய செல்வமுந்
தேனை நேர்சொற் றெரிவைய ரின்பமும்
வானை யெட்டி வளர்குருந் தாசலக்
கோனை யெட்டினர்க் குக்கசப் பாவதே. (௩உ)

பாவ நீங்கப் பலபரி காரநூ
லாவல் கொண்டுமிக் காய்ந்து வருந்துவீர்
தேவ தேவன் றிருக்குருந் தாசலன்
சேவடித்துணை சென்னியிற் கொண்மினே. (௩௩)

கொண்டல் வண்ணன் குளிர்மறை நான்முக
னண்டர் கோனர சாட்சி யிவையெலாந்
தொண்டர் தாட்பொடி தோய்குருந் தாசலங்
கண்ட பேர்க்குக் கனவையொப் பாகுமே. (ருச)

ஆகு வாகனத் தண்ணலே வள்ளியின்
பீகு வான்கரி யென்ன வரப்புரி
மாகு ருந்த வரைக்கும ரேசனு
ளாகு வார்கட் கரியதொன் றில்லையே. (ருரு)

ஒன்றிரண்டென் றுரைத்திடு மாற்றமற்
றுன்றிருப்பதத் தொன்றிட நல்குவாய்
கொன்றிகழ்ந்த குருந்த வரைத்தலே
நின்றிலங்கு நிராமயச் சோதியே. (ருசா)

சோதித்தென்னைத் துயருற வைத்திடு
நீதித்தன்மையை நீத்துக் கருணைமெய்
யாதிக்கத்தை யகம்பொருத் தாய்சுடர்
மீதிற்றேய்குருந் தாசல வேலனே. (ருஎ)

வேலமைந்த வியன்புய மேற்கிளிக்
கோலமேவிக் குளிர்தரு பாவலன்
பாலமைத்த மெய்ப் பத்தியெற் கீகுவாய்
ஞாலமேத்து நலக்குருந் தேசனே. (ருஅ)

தேசமுற்ற திருவரை யெங்கணும்
வாசமுற்ற நின் வாச மலர்ப்பத
நேசமுற்ற நிலையருள் வாய்பிர
காசமுற்ற கதிர்க்குருந் தத்தனே. (ருகூ)

தத்தமென்றுயி ருந்தர வுன்னுவேன்
சித்தம்வாடித் தியங்குத னீதியோ
பத்தரிச்சைப் படிவிளை யாடுமென்
னத்தனே குருந் தாசலத் தண்ணலே. (சO)

வேறு.

அண்ணலணிக் குருந்தவரை யமர்ந்தருளு மாறுமுகன்
றண்ணளினப் பதமல்லாற் சளம்புரிவஞ் சகமாயைப்
புண்ணகற்று மொருமருந்து புணரியுடைப் புவியுன்றிப்
பண்ணவர்வாழ் விண்ணகத்தும் பாதலத்தும் யாண்டுமின்றே.

இன்றுவரு மோநாளைக் கேவருமோ நின்னருட்சீ
ரென்றுகரு தினனெதிர்பார்த் திருக்கின்றே னியற்குருந்தக்
குன்றுறையுங் கோமானே குறவள்ளி குஞ்சரிதோ
ளொன்றுமணி மார்பாநின் னுள்ளமறி கின்றிலனே. (சஉ)

கின்னமிகப் பொருத்துலகிற் கிடந்துதடு மாறுமெனக்
குன்னடியற் றொருதுணையீண் டுளதோநீ யறியார்போன்
றின்னநெடுஞ் சோதனைசெய் திருந்தனையே லேழையனே
னென்னசெய்வேன் குருந்தவரை யிறையுனையேத் திடல்விடுத்தே.

விடுமுலகப் பொருள்கண்மிசை வேட்கைமிகுத் தேதுயரப்
படுமனமுன் றிருவடிமெய்ப் பத்திபெறப் பணித்தருள்வாய்
நடுநிலைதோய் மாதவர்தந் நன்மனத்தி னுகமெட்டித்
தொடுகுருந்த வரைமுடியிற் றுலங்குசுடர் மணிவிளக்கே. ()

விளம்புமடிச் சிறியேனென் விண்ணப்பந் திருச்செவியேற்
றுளங்கனிந்து நல்கிடுவா யுணர்வுதிரிந் தயன்முதலோர்
வளம்பெறவேட் டிரந்துமிக வழுத்திடினும் வழங்காதுன்
றளங்கொடிரு வடிபுகச்செய் தண்குருந்த வரையானே. (சரு)

வரைகொளணித் திருக்குருந்த வரைகொளருட் குருந்
தேநின், விரைகொள்பதத் துணையின்ப வேலையிடை முழு
காமே, தரைகொள்கொடும் பவத்துக்க சாகரத்திற் கவிழ்ந்
தெய்த்தேன், புரைகொள்வினை மனப்பேயேன் போக்கினை
யென் னென்பேனே. (சசு)

என்னென்பே னுனைக்குருந்த விறைவாகுஞ் சரமுகவன்
பின்னென்பேன் பிறைமுடித்த பெருமானுக் கருள்புரிந்த
முன்னென்பேன் வள்ளியருண் முளரியந்தாட் டுணைவழுத்து
மன்னென்பேன் மணியென்பேன் மாற்றுயர்பொன் னென்பேனே.

என்னகுறை மடநெஞ்சே யெழிற்குருந்த வரையமர்ந்த
மன்னவன்மா லயற்கரிய வரதனுக்கோ மொழிப்பொருள்சொல்
கொன்னகுசெவ் வாய்க்குருந்தாங் குமரகுரு பரமுருகன்
பொன்னடிமெய்ப் புகழ்பாடிப் போற்றுநமக் கிகபரத்தே. ()

பரவிடமெய் யளித்தன்பிற் பாடிடநா வழங்கியென்றுந்
திரமுறப்பொற் பதங்கருதச் சிந்தையுமீந் தருள்குருந்த
வரதனையுள் ளெண்ணாதார் வான்மிசையைந் தருநிழற்க
ணரசெனவா ழினுந்துயர வாழிகரை காணாரே. (சகூ)

காணாரு மாமறைநூல் கல்லாருந் தேர்ந்துய்யச்
சேணாருந் திருக்குருந்தச் சிலம்பின்மிசை வதிவான்றாள்
பேணார்கொண் மானிடமெய்ப் பிறப்பினிற்புள் விலங்காகின்
மாணாரும் பெரியோர்கண் மதிக்குநலம் பெறலாமே. (ரு௦)

தனனதத்ததன தனனதத்ததன தனனதத்ததன தந்தனா.

பெறுவதற்கரிய பிறவிபெற்றவர்கொள் பெருமையைக்
கருதி லெண்கணா, னிறுதியிற்கெடவி லவர்பதத்துகள்கொ
டிலகுமொப்பறுகு ருந்தமே, லறுமுகக்குமர னடிகணத்தி

யொலி யமைதிருப்புகழி யம்பியே, நறுமலர்க்கமலை சுதரையக் கரிய நமனைவெற்றிபெறு மின்பதே. (ருக)

தனன தந்ததன தனன தந்ததன தனன தந்ததன — தன தனு.

பதுமனன் றுமம தையின்வணங்கிலது படர்தரும்பொ ழுதி லருளினு, லதுகெடுந்தகையின் வலிதுதண்டனைசெய் தருள்குருந்தவரை யவன்முனு, மதுரவண்டமிழி னமதுளங் கொள்குறை வகைசொல்கின்றதுயி ருடன்மெயே, யதுல மொன்றவனெர் பணியினென்றுமிக வமையவென்றுணர்மி னுலகரே. (ருஉ)

தத்ததத்ததன தத்ததத்ததன தத்ததத்ததன — தந்தனு.

கர்ப்பவெப்பவல்வி னைச்சடத்தொருக ணச்சுகத்தினைவி ரும்பியே, துர்ப்பழக்கவுல கிற்சுழற்றுமெனெர் துற்குணக் கொடிய நெஞ்சமே, சர்ப்பமெய்ச்சொனகு டற்களித்தருட வத்தனத்தியகு ருந்தனே, ரர்ப்பணத்தகைசெய் திட்டருட் படிவ தைக்கொளுட்பெருகு மின்பமே. (ருங)

தந்ததந்ததன — தானனு.

பந்தமென்றுளமி ருங்தெழுந்தவிருள் பங்கமொன்ற வெழு பானுவே, யந்தகன்கமல னங்கசன்படைய டுஞ்சரங் குலவு சாபமே, யுந்தகந்தனில விர்ந்தவன்பெனுமொ *ருந்தி பொங்கவெழு சோமனே, யந்தரந்தொடுகு ருந்தவண்கிரிய மர்ந்தவன்சுவண பாதமே. (ருச)

தனன தான்தன — தந்தனு.

தமரவாரிதிகொ ளுலகவாழ்வுசர தமெனவோடுபுல வம்பரோ, டமர்செய்தேழைபடு துயரெலாம்வனச மமையும் வாவிகொள்கு ருந்தமா, சிமயவேலனடி கருதியேதுதிசெய்

*உந்தி — கடல்.

திடவுனேல்வைதனி லென்றுநே, ரிமமதாமறதி யமையுமேல் வையினி லெணையிலாதறவி மூங்குமே. (ருரு)

*தானதானதன — தந்தனு.*

மேகநேருடல மாயனேதுபுகழ் மேன்மைகோடிகொள் குருந்தமா, நாகமீதிலகு ஞானநாயகனை நாடுசீலமலி தொண் டர்தா, மாகமீதுதரு நீழலூடமையும் வாழ்விலேசுகமும் வண்டர்தா, மேகலாநிரய மீதுசோகமுமு ளேகொளாரிதுபொ யன்றரோ. (ருசு)

*தன்னதன்னதன — தந்தனு.*

அன்னமன்னநடை துன்னுகன்னியர்க ளம்மமன்னு நசை யொன்றியே, யின்னல்கொண்மயலி லுன்னுடன்மருவு மென்னையுன்னதொரு நண்பனு, யுன்னன்மெய்ம்மையெனி லம்மவென்மொழிகொ ளுண்மைநந்நிதிகு ருந்தமா, நன்னகம் வதிவ துன்னுகொன்னிதனி னண்ணுமும்மைநல நெஞ்சமே.

*தய்யதய்யதன — தந்தனு.*

நல்லசெல்வமுயர் கல்விவல்லபமு நல்கும்வையமிசை யண்டமீ, தொல்லைவையரெதிர் கொள்வருள்ளமிசை யொல்க வில்லதுவ ணங்குவா, ரல்லன்மல்குவினை மெய்யிதெல்லுறமு மையமில்லமெய்கு ருந்தமா, கல்லனெஃகமிசை கைகொள் வள்ளலடி கைதொழல்செய்மட நெஞ்சமே. (ருஅ)

*தாத்ததாத்ததன — தந்தனு.*

மேற்கொளாக்கையெழில் காட்டிமாற்றரிய வேட்கை யேற்றுமட மங்கைமார், சூற்கொள்கார்க்குநிகர் கூற்றனுட் கள்புரை தோற்றமாத்தெரியொர் பண்பினு, னூற்கொள்பாப்

புலவர் மாட்சிசாற்றமுத னேக்குகாட்சிகொள்கு ருந்தமார், வேற்கொடீசர் த்தனடி போற்றுவார்க்குமன மீட்கையாற்ற லெளி தும்பரே. (ருக)

தாந்ததாந்ததன — தந்தன.

ஆன்றசான்றவர்கள் கூண்டுமாண்கலைக ளாய்ந்துவான் றொடுகு ருந்தமே, லேன்றசேந்தகர நான்குமூன்றொல்படை யேந்துவேந்தவென வன்பிலா, நான்றவாங்கநல் மேய்ந்திலேன் புவியி னூன்றிலேன்கவலை கொண்டுளே, னூன்றவான்புடைய மாண்பர்போன்றெனையு மோம்பல்வேண்டினனு வந்தரோ. ()

வேறு.

வந்தித்திருக்கு முடிநேர்குருந்த வரைமீதமர்ந்த மணி யென், றுந்தித்திருக்கு களினின்றரும லொழுகம்புகொண்டு னடியே, சிந்தித்திருக்கு மவர்பாததூளி சிரமீதணிந்து சிறி யேன், பந்தித்திருக்கு மலமற்றிலங்கு பரிசெய்துமாறு பணியே. (சுக)

பணியேனுனம்பொ னடியன்பினேடு பணியன்பர் தொண்டு புரியத், துணியேனவத்தி னிடைசூறையூடு சுழ லுந்துரும்பு புரையப், பிணியேகொண்மாயை யுடல்பேணி நின்ற பிழையேனையென்று தயவா, லெணியேழையென்ன வருள்வாய்குருந்த விரவிக்கணென்று மிறையே. (சுஉ)

இறையேனுமுன்பொ னடிநாடிநெஞ்ச மெரிமீதமைந்த விழுதாந், துறையேபுகுந்த திலைவன்பமைந்த தொழில் கொண்டபாவி துதியா, முறையேமெயன்பு பதிதொண்ட ரோது முறைகொண்டகாதி லுறுமோ, விறையேகுருந்த வரை யாயிவேழை யெதுபற்றியுய்வ திசையே. (சுங)

இசைகொண்டவெண்ணின் மறையூடடங்க விலதாகி யங்க வைகளின், மிசைகொண்டபண்பி லணியார்குருந்த வெற்பூடமர்ந்த வெளியே, திசைகொண்டசீர்த்தி பெறுமுன் றனன்பர் திரள்சேருமின்ப மருளின், வசைகொண்டபாவி யமையும்படிக்குண் மதியாய்தயாவின் வலிதே. (கூச)

வலிதிற்புணர்ந்து ளிருண்மாயைவஞ்ச வலையிற்படுத்தும் வகையான், மெலிவெய்துமேழை பிழையெண்ணிநீகை விட வுன்னிலன்பர் மிகுசீர், மலிவுற்றகந்த வரைநேர்குருந்த மலை மீதமர்ந்த மணிநின், பொலிவுற்றபாத வனசத்திலேது புகு கின்றதில்லை யிலையே. (கூரு)

இலைவேல்கரத்தி லமையக்கொடாவி யினமொன்று துன்ப விருளார், மலைவாசகற்றும் வகைநீள்குருந்த மலைவாச முற்ற மகிமைத், தலைவாநினம்பொ னடிகட்கமைந்த சரணு மெனேச்ச கமிசைப், புலைவாழ்வமைந்த கொடியோர்களூடு புகுமாறியற்ற னலமே. (கூகூ)

நலமுற்றவின்ப நிறைவார்குருந்த நகமீதமர்ந்து தொழு வார், குலமுற்றவாவு பயனென்றிநெஞ்சு குளிரச்செய்நீயெ னளவிற், றலமுற்றசீர்த்தி களிலையமாக்கு தகைநின்றயைக்கி சைவதோ, வலமுற்றவேல்கொண் மணியேயென்முன்பு வந் தாள்கதுன்ப மையுமே. (கூஎ)

அமையன்னதோள்கொண் மடமாதர்மைய லவமொன் றிநெஞ்ச மறவே, குமைகின்றபாவி யுனதன்பர்கொண்ட குளிரின்பஞான நிறைவூ, டமைகின்றநாளு முளதோவதேனு மறைவாய்குருந்த வனகச், சிமையம்பொருந்து தளிமீதிலங்கு சிவஞானபோத குருவே. (கூஅ)

குருவாகிவந்து எருளால்வழங்கு குளிர்ஞானவின்ப புரணப், பெருவாழ்வைவிட்டு மிகுதுக்கமொன்று பிரபஞ்ச மாய வினைசே, ருருவாமுடற்கு எயர்வுற்றனன்மெய் யுணர் வொன்றவென்ற லையிலுன், மருவார்பதத்தை யமையாய் குருந்த வரையாலயக்கு மரனே. (௬௯)

குமராகுருந்த வரைமீதமர்ந்த குழகாபுலக்கொ டியர்பா, லமராடிநொந்து முடியாதுனம்பொ னடிதஞ்சமாகி னனை னைத், தமராவிளங்கு கவுமாரரொன்று சபையுட்புகுத்த னக மார், மமகாரமுற்று மடுவாய்மெஞ்ஞான வடிவேற்கரத்த மரனே. (எ0)

வேறு

மரணம்பவமென்ற கொடும்பிணியால் வாடித்தளர்வுற் றுன் மறைத்தலைதோய், சரணஞ்சர ணுகுமெனைப்புறநீ தள் ளிற்புவிமீதொரு சார்பறியேன், கிரணங்கொள்கலாப மயிற் பரிமேற் கிளருஞ்சுடரே கிருபைக்கடலே, யரணங்கொள் குருந்தவரைத்தளிமீ தமருங்குமரா வறுமாமுகனே. (எக)

முகமன்புக லம்புவி மானிடர்தம் மொழிநம்பி யவத் தின் முயன்றுழல்வே, னகமன்னுமு னம்புய வார்கழல்கண் டமையின்பமெ யன்புற வென்றருள்வாய், சுகமன்னு திருப் புகழ் செப்பிடுமெய்ச் சுகமன்னிய தோளுடை யாய்தொழு வோர், மிகமன்னு குருந்த மலைத்தலைமேன் மிளிர்கின்றமெஞ் ஞானவி யன்சுடரே. (எஉ)

சுடுகின்ற வினைச்சக வாழ்வினையே சுகமென்றுழ லப்புரி தொல்லிருளிற், படுகின்ற வுயிர்க்குள மைந்துறுநீ பாராதவர் போலுறல் பண்பதுவோ, வடுகின்ற புலப்பகை வோர்பரிவா

யலர்கொண்டு பணிந்திட வண்டமுடித், தொடுகின்ற குருந்த வரைத்தலையிற்றுறைகின்ற துவர்த்திருமேனியனே. (எரு.)

மேனிற்பது வார்த்திக மாரணமே விரவாமுன மெய் யுணர் வொன்றிவினை, யூனிற்பதி யாநல மேழையெனக் குதவென்றுனை யுண்டின னூழிகலாய்த், தானிற்பது வென் றியெனக்கமையத் தந்தாளுதி சத்தி தரித்தகையாய், வானிற் பதி கொண்டல்கொ டண்டலையார் வளநீடு குருந்த வரைக் கரசே. (எச)

அரனரண னங்குறு மாமுனிவோ னருணைச்சுக நாத னடைந்ததனிப், புரணகர மந்திர மொன்றிமருட் புலவாக மிறந்தமை நாள்புகல்வாய், சரணமடி யார்குறை யற்றருண் மெய்ச் சலதிக்கு ளமிழ்ந்து தழைத்தமைதற், கரணன குருந்த வரைத்தலைமீ தருளாட வியற்றயில் வேலவனே.(எரு)

அவமேபுரி யும்புல வேடுவரோ டமராடி யிளைத்துனை யண்டினனின், றுவமானமி லுன்பத மென்சிரமீ துறுவித்தெ னுளத்துய ரோவிடுவாய், தவநீடிய முத்தமிழ் விற்பனமார் தகைமைக்கவு மாரர்கள் சங்கமருச், சிவஞான நலங்கொள் குருந்தவரைச் சிகராலய மேவிய சிற்பரனே. (எசு)

சிற்பங்கள் புராண விதிக்கமையாத் திருமேனிகொள் சுந்தர னைக்கவினுர், பொற்பங்கய வாவி யினம்பொலிவார் பொழின்மூடு குருந்த வரைத்தலைமீ, தற்பங்க முறத்தொழு தேத்திடுபே ரற்பங்க முருதவ ரல்லன்மிகக், கற்பங்க ளயின் றியல் பத்தியமே காப்பார்கண்மெ யன்பர்ந கைத்திடவே. ()

கைவாய்கட மாவின மஞ்சவிறற் கண்டீரவ மொஞ்சு கனைப்பமைசூன், மைவாச வனங்கொள் குருந்தவரை வள்ளற்

கரு தார்மரு வும்பயனே, பெய்வாச மலர்க்கணை யூடுருவப் பெண்ணுவ லமைந்து பெறுஞ்சுகமாம், பொய்வாதனை யுஞ்சம தூதர்கொடும் போரும்புல வூடுபொ ருந்தலுமே. ()

பொருவாநல மொன்று குருந்தவரைப் புனிதன்புகழ் பாடிடு புண்ணியர்தோய், பெருவாழ்வய னாதியதேவர்களும் பிரமித்திடு சித்திசெய் பெற்றியுடன், குருவாகி மதத்தினர் தாழ்கடவுட் கோலந்தம தென்றுகுலாவி யொரூன், மருவா நிலை முற்படு பற்பலரும் மருவப்புரி பேரருண் மாட்சியதே. ()

மாட்சித்தவ ரேத்தி யுளங்குளிர்வான் வானங்கொள் குருந்த வரைப்புடையே, காட்சித்தகை கொண்டு விளங்கு புகழ்க் கந்தாமுருகா கதிர்வேலரசே, பூட்சிக்கு ளமைத்திது காறுமெனைப் புன்கண்ணுற வைத்தது போதுமினி, மீட்சித் தகை யற்று விளங்குமுரு வெளியாமுயர் மெய்விர வப்புரியே.

வேறு.

புரிகுழற்கருங் கண்மட வார்மயற் புழுக்கிற்
பரிதவித்திடப் புரிகொடும் பாவவல் லிருளை
மரிதரச்செய்மெஞ் ஞானவாள் வழங்குவான் குருந்தக்
கிரியுளான்கரி யிதற்கருணசலக் கிளியே. (அக)

கிளிச்சி றைப்பொலங் கோபுரக்குருந்தவான் கிரியின்
றளிச்சிறப்பனை நெஞ்சருகிடத்தடங் கண்ணுற்
களித்தி றைப்பொழு தேதரிசித்தவர் கருவார்
வளிச்சி றைப்பையுள் வாய்ந்திடா மாட்சிதோய் வாரே. ()

வாரணிச்சுணங் கார்தனப்புலோமசை மகிணன்
சீரணித்திடு சீரணித்தாகிடச் செய்வான்

சூரணித்திரள் செறுங்குருந் தேசனைத் தொழுவார்
கோரணிப்பொய்மா யையையடுங் குமரராவாரே. (அரு)

ஆவணங்கொடு காட்டியாரூரரை யாண்மெய்க்
கோவணங்கொள்வேற் குருந்தவெற்பமைசிவ குரவன்
தூவணங்கொண்மெய்த் திருப்புகழோதுதொண் டருக்குப்
பூவணங்கொழிந் திடப்பதமீவதற் புதமோ. (அச)

புதனிகர்த்தவிற் பத்தியுஞ்சூற்புயல் பொருமச்
சுதனிகர்த்தமெய்ச் சித்தியுங்காலனைத் துவைத்த
பதனிகர்த்தவான் முத்தியுமீதிபத் தருளிங்
கிதநிகர்த்தருள் குருந்தவண்கிரியிலோங் கினனே. (அரு)

ஓங்கத்தக்கது நின்றிருவருட்டெளி வூக்கந்
தேங்கத்தக்கது நின்றிருவடிகொள்பத் திமைச்சீர்
தாங்கத்தக்கதுன் மெய்யடியார்பெருந் தகைமை
நீங்கத்தக்கது பவங்குருந்தாசல நிதியே. (அசு)

நிதிபடைத்தவர் தமக்குபசாரச்சொ னிகழ்த்தும்
விதிபடைத்திட வெனைவிதிபடைத்திடல் விலக்கி
மதிபடைத்தவர் தொழுங்குருந்தாசல மகிமைக்
கதிபடைத்திட வருள்புரிவாய்கடைக் கணித்தே. (அஎ)

கணிதமற்றவான் கவிபொழிந்துன்கழற் கமலத்
தணியவேட்டவென் னகத்தவாநலங்களை யருளாத்
துணிவும்வன்மமு நின்னுளத்தமைவதென் சொல்லாய்
பணியணிப்பர னிகர்குருந்தாசலப் பதியே. (அஅ)

பதியும்வாழ்க்கையுந் தந்தையுந்தாயுமெய்ப் பற்றார்
சதியுமைந்தருஞ் சுற்றமுந்துணைவருந் தவிரா

நிதியுங்கல்வியு மின்பமுஞ்சீலமு நிலையாங்
கதியுமெங்குருந் தேசநின்பாதபங் கயமே. (அகூ)

கயமைமிக்கவென் னனையருய்ந்திடக்கடைக் கணிக்குந்
தயவுதாங்குநற் றகைமைமெய்ப்பத்தியுட் டழைத்த
நயமிகுந்தவர்க் கருளவிற்பெருமையின் ஞான
மயவியற்குருந் தேசவெற்கருள்புரி வாயே. (கூ0)

வேறு.

வாய்த்தவுன தருட்கடலின் மூழ்கிமுன்னோர் வம்பரையுந் திருத்திடவுண் மதிக்குமென்னைப், பேய்த்தகையார் குறிப்பறிந்தீண் டமைந்துநெஞ்சம் பேதலித்து வாடவைத்தல் பெருமைதானோ, வேய்த்தவள வெற்பெடுத்த வரக்கனுக்கும் வேண்டும்வரந் தரும்விமலன் விழியிற்றோன்றித், தூய்த்தவர்கள் பணிந்தேத்தக் குருந்தவெற்பிற் றுலங்குதிருக் கோயில்கொண்ட சுடர்வேலோனே. (கூக)

வேலைநடுச் சூதவுருக் கொடுநின்றானை வேலைவிடுத் தொழித்துவிண்ணோர் வேந்தனல்கும், பாலைநிகர் விழித் தெய்வ யானைதன்னைப் பரிவின்மணங் கொண்டபரம் பரனே வஞ்ச, மாலைமிகப் பெருக்கியெனை யலைக்குமூல மலப்பகையை மாய்த்தெனதான் மாவைவிண்ணுர், சோலைமலி குருந்தவரை திருந்தவோங்குஞ் சுப்பிரமண்ணியநின்றுட் டுணைசேர்ப்பாயே. (கூஉ)

பாயுடைகொ ளமணர்குலக் கோடைநீங்கப் பதிகமழை பொழிந்தருட்சீர் பரந்தவால, வாயுடைய மன்னவன்கூன் வலிதின்மாற்றி வரமருளுங் குருந்தவரை மணியேபாவ, நோயுடையப் புரிதலினல் வாடியுன்று ணேக்கிமுறை யிட்ட

யர்ந்தே னுடங்கிப்பெற்ற, சேயுடையப் பார்ப்பதுதாய்க் கழ கோவுன்றன் றிருவுளத்தின் குறிப்பறியேன் றிகைக்கின் றேனே. (சுந)

திகைத்துவருந் திடுமனத்தைத் தேற்றியுன்பொற் றிரு வடியி லமையும்வணஞ் செலுத்திலந்தோ, பகைத்துமதன் கணையுமிகு துயர்தோய்மாயா பாசமும்வந் தெனைமூடப் பதைப்புற்றெய்த்தே, னகைத்துவர்வாய் வள்ளிதெய்வ குஞ்ச ரிக்கு நாயகனே பெருங்கருணை ஞானவாழ்வே, யுகைத்துவரு மயிற்பரிவே லுடையாயென்னை யுடையாயென் பவவினைமுற் றுடைத்தாள்வாயே. (சுச)

ஆட்கொண்ட குருமணியே குருந்தவெற்பி லமர்ந்த ருள்பே ரொளியேநின் னமலஞானத், தாட்கொண்ட பேரின் பக் கடலுள்மூழ்கித் தன்னைமறந் தன்பரின்பிற் றழைக்கின் றூர்யான், வாட்கொண்ட கண்மடவார் மயலினெஞ்சமத்துழக் குந்தயிரேபோல் வாடுகின்றேன், நாட்கொண்ட நமன்கரத்தி லண்டயாமுன்னின் ணுண்மலர்த்தாள் சிரத்தமைக்க நல்கு வாயே. (சுரு)

நல்லவுன தருட்டுணைகொள் பெரியோரெல்லா நகைத் திகழ வங்காடிஞாளியேபோ, லல்லல்வினைப் புன்புலக்கூ டோம்பிநாளு மவம்பெருக்கித் திரியுமறி வில்லேன்றன்னைப், புல்லனென நீயும்வெறுத் தகற்றுவாயேற் புலைநிரய மன்றி மற்றோர் புகலுண்டேயோ, செல்லணையுங் குருந்தவரைக் கோயின்மேய செழுஞ்சுடரே முழுமுதலாந் தேவதேவே. ()

தேவர்தொழு தேத்துபெருந் தேவேமுக்கட் சிவபெரு மான் குளிரவுப தேசஞ்செய்த, மூவில்சீர் மெஞ்ஞான

வொளியேயன்பர் முழுத்துணையே குருந்தவரை முதலே நாயேன், பாவவினை மலவுடலுட் கிடந்து நாளும் படும்பாடத் தனையுநன்கு பார்த்துமுன்றன், சேவடிசேர் தரப்புரியா திருந்தா யீதுன் றிருவருளுக் கேற்பதுவோ செப்புவாயே. ()

செப்புநிகர் தனமடவார் தமதுமாயச் செப்பிடைவைத் தாட்டவுளந் தியங்குவேன்செய், தப்புகண்முற் றிலும்பொ றுத்து வலிந்துன்செம்பொற் றுட்டுணைசேர்த் தருள்கபுறந் தள்ளுவாயே, விப்புவிதோய் கோரவிருட் பந்தநீக்கி யேறும் வகை யறியேன்யா னென்செய்கேனே, கைப்புகர்மா வினமுலவுங் குருந்தவெற்பிற் கவின்றமையுங் கதிர்வேற்கைக் கடவுட் கோவே. (௯௮)

கோவதைத்து னுண்டுவக்குங் கொடியோர் யாருங் குறையகன்று மதம்பொழிகுஞ் சரம்போல்வாழும், பாவமலி கலியிலுன தடியார்தம்மைப் படைத்தவர்கள் படுந்துயரம் பார்த்தாய் ஞானச், சேவகநீ யதைநீக்க முயலின்முற்றுச் செய்கையோ நீதியைச்சிந் தித்துள்ளாயோ, வாவவெனச் சிறிதிரங்காய் குருந்தவெற்பி லமரரடி யவர்தொழவா ழமலவாழ்வே.

வாழ்வுபடைத் தமரர்சுக மருவும்வண்ணம் வரதனுதற் கட்பொறியா வந்துமுன்னாள், சூழ்விறற்று னவர்குலத்தை மாய்த்தஞானச் சுடர்வடிவே லேந்துகரத் தோன்றலேசெங், கேழ்விரைத்தா மரைத்தடஞ்சேர் குருந்தவெற்பிற் கிளர்மணியே யெனதுமயற் கேதமுற்றும், போழ்விரியா கமமறைநிச் சயமாய்நாயேன் புகலிடமாய் விளங்குதுணைப் பூந்தாளானே. (௧௦௦)

முற்றிற்று.



உ

குருவே துணை.

# திருப்புகழ்ப் பதிகம்.

காப்பு — வெண்பா.

விருந்தா யடியார் விழிபருக வின்பக்
குருந்தா சலத்தணியார் கோயில் — வருந்தாதை
யாங்குமரன் மேற்சூட் டணியார் திருப்புகழென்
பாங்குதரு மன்னேன் பதம்.

## நூல்.

தனந்தனன தானன — தனதான.

நிணங்குருதி தோன்மூடு முடம்பையொரு தானக
நினைந்துமட மானர்கண் மிசைமாலாய்
நிதஞ்சுழலு மாபாத ருடன்புவியி னுயேன்மெய்
நிசங்கொளுற வேபேணி மடியாதே
கணங்குலவு வேதாதி யளந்தறிகி லாமேன்மை
கவின்றிடுமுன் வாரீச பதமீதே
கலந்துமரு ளார்மாயை யொழிந்தபெரி யோரேவல்
கனிந்துமுய லோர்போத முறவாள்வாய்

பணங்குலவு பாய்மீதி லுறங்குநெடு மால்பேசு
பரந்தபுக ழோர்கோடி யுடையோனே
பரண்கொள்குற மானவன் மிகுந்தணைய வேதாள்கள்
பணிந்துபல வாருடல் புரிவோனே

குணங்கருறழ் வேன்ஞான மிணங்குனடி யார்மேவு
குணங்குலவ மாபோத குருவாவாய்
குரங்குகள வார்தேறல் பொழிந்தபொழின் மேன்மூடு
குருந்தவரை வாழ்வான பெருமாளே. (க)

தனந்தனனத் தானனதானன — தனதானா.

கவின்பொலிவிட் பாலணைசோலைக
ணிவந்தமலைச் சாரல்கடோறருள்
கமழ்ந்தநின்மெய்ப் பாதசரோருக மலரூடே
கலந்தமனத் தோடிடையீடற
ந் நெகிழ்துருகிப் பாடல்பல்கோடிகள்
கனம்பொழியப் பான்மையிலோதுபு மகிழேனோ

நவின்றமறைச் சீலமெலாமற
விகழ்ந்துடலைப் பேணிடுவார்வெரு
ணமன்புரைபெட் போடிகமீதினின் மிளிரேனோ
நலிந்துகலித் தீமையில்வாடுந
ருளங்குளிரக் காதல்கொள்பாவையு
நயந்தருள்வைப் பாமெனவேயுல விடவாள்வாய்

அவிழ்ந்தகுழற் கோதையநீதர்க
ணிறைந்தசபைப் பாலழுமோர்துய
ரறும்படியப் போதெதிர்கேசவன் மருகோனே

யமண்சமயத் தாரழல்கூனுடல்
பொருந்தரசற் காம்வகைபாடல்செய்
தணங்குமனத் தார்வநிலாவிட வருள்வோனே

குவிந்தமனத் தூயகௌமாரர்க
ளுடன்குலவத் தியனையாளருள்
குளிர்ந்தவிழித் தேசிகனாகிய முருகோனே
குடங்கைவிழிச் சேணரமாதர்க
ணடம்பொலிபொற் பாகரமாயவிர்
குருந்தமலைக் கோயிலின்மேவிய பெருமாளே. (௨)

தனத்தனந் தானன தானன — தனதானா.

மடக்குணந் தோயுமு லோபர்கள்
கரத்துறும் பீதக மால்கொடு
வடித்தசெந் தேனமு தேநிகர் பலபாவே
வழுத்தியொன் றுவனு றுதிடர்
மிகுத்திடும் பாவலர் தோயவை
மதித்திணங் காதுனை யேதொழு திடுமேலோ

ரிடத்தமைந் தேபத மார்துகண்
முடிக்கணிந் தாகுல மாயைசெ
யிடுக்கண்வென் றூர்வநி லாவிட வருள்வானீ
ளிருக்கினங் காணரி தாகுநி
னருட்பெருஞ் சேவையெ னாதுக
ணிடைக்கலந் தேயக லாதருள் புரிவாயே

கடக்கரந் தோய்குறு மாமுனி
கிளித்தவன் கீரனு ணீடிய
களிப்பெருஞ் சாகர மாயவி ரிருதாளா

கனைக்குமஞ் சூர்மக வான்மக
ளிருக்கவன் சாரல்கொண் மான்மகள்
கழற்பணிந் தோகைகு லாவிய கதிர்வேலா

திடத்தவந் தோயடி யார்நடு
வருட்சுகஞ் சால்பத வாரிச
சிறப்புறுந் தேசிக னுவரு முருகோனே
திரட்பெருந் தூயகௌ மாரர்க
ளுவப்புடன் பாடொலி சேணுறு
திருக்குருந் தாசல மேவிய பெருமாளே. (ரு)

தனத்தனந் தானனத் — தனதானா.

கனைத்துவண் டார்மலர்க் குழற்றடங் கோல்விழிக்
கடைப்பொலம் பூதரத் தனமானார்
கருத்திலொன் றேவலிச் சையிற்புரிந் தாகுலக்
கடற்படிந் தினமிக் குழலாதே
யுனைப்பணிந் தோகையிற் றுதிக்குமன் பாளருக்
குரித்தமைந் தேழ்பிறப் பறவாழ்வா
னுமைக்கிடஞ் சார்பரற் களித்திடுந் தாரகத்
துளக்கமொன் றோர்சுகப் பொருளீவாய்
பனைக்கைகொண் டானுரத் தினிற்பொருந் தாழியைப்
பழிச்சுமன் பாரரிக் கருள்வோனே
பருப்பதந் தோறுமுற் றடித்தொழும் பாளருற்
பவப்பயந் தீர்தரப் புரிவோனே
தினைக்கிணந் தேனுமற் புளத்திலன் றேரமெய்ச்
சிறப்பமைந் தாளருட் குருநாதா

செழித்ததண் டாமரைத் துணர்த்தடந் தோயணித்
திருக்குருந் தாசலப் பெருமாளே. (ச)

தனந்தான தத்த தனதன — தனதான.

பொலந்தோயு மொப்பின் மனைநில
மலங்கார மிக்க மனைசுதர்
பொருந்தோகை பெற்றுண் மதிசிறி திலராயே
புலங்காணு மற்ப சுகமதி
லமிழ்ந்தாண வத்தொ டைமையெவர்
புரைந்தாரெ னச்சொன் மடமையர் மகிழ்வோடே

நலந்தோய நித்த முனதடி
வணங்கார்வ முற்ற வடியவர்
நலிந்தேயுள் வெட்கி யலைதர விடலாமோ
நகுங்கூர யிற்கொ ளுனையல
தெவன்றுனெ ழிக்கு நிலைமைய
னவங்காண நிற்கு ளருள்சிறி திலையேயோ

விலங்கூடு பட்ட சுரரிறை
மகன்றேர முற்சொ லருண்மொழி
விணம்பார்ம ணக்கும் வகைபுரி குமரேசா
வியன்பாடல் செப்ப விசைகிலன்
முனென்பேர்நன் முட்டை யெனவியல்
விளம்பாட விட்ட வருள்வள மிகையோனே

குலஞ்சாதி செப்பி யுடனசை
மிகுந்தேனெ னைப்பொ யுலகிடை
குழம்பாநி லைக்க ணுறவிடு குருநாதா

குடைந்தார்த மைப்பொய் மலவிரு
ளொழிந்தேறி டச்செய் தடமவிர்
குருந்தாச லத்தின் மருவிய பெருமாளே. (ரு)

தனனதன தனனதன தனனதன தனனதன
தந்தான தத்ததன தந்தான தத்ததன — தனதானு.

இகபரமெ னிருவகைய நலமுழுது முயிரினமி
சைந்தார்வ முற்றுகதி யுந்தோய வைக்குமுன
தினியதளி புதுமைபெறும் வகைசெய்தடி யவர்கண்மிக
வின்பார்த ரப்புரித ருந்தூய துய்ப்பினமு
மிடுபணியை யொருவியிரு ணரகிலுற வமைபொருளி
ளங்கோதை யர்க்குதவி நன்கேவ விற்சுழல்வ
ரொழியாரோ

இதயமிசை கருதுதொறு மளவில்சுக மமையவிடு
மென்றாழ்ந டுப்பொலியு நின்பாத நத்திமறை
யுபநிடத முதலகலை யினமுமறி வரியநின
தொண்சீர்மி குத்தவருண் மொய்ம்பார் திருப்புகழை
யிடியிலுரை புரிதலில திருணரரை யரிபிரம
விந்தான சத்திரவெ னும்பாடல் செப்புநரொ
டிசையாதே

ககனமிசை யமரர்புகழ் தரவுலகி லுறுமனிதர்
கன்றுகு லச்சலதி யின்றூ விடப்பருகு
வடவைநிக ரருள்விழிக ளுடையனென வொருமைபெற
வந்தார்வ முற்றுபுவ ளேந்தேபு றத்திலொரு
கணமுமகல் கிலதுதொடர் வுறவரைக டொறுமுனது
கண்டேநி கர்த்தபுகழ் விண்டாட னித்தமுயல்
வுறுமாறே

கடியதிரி மலவிருளு மொழியவிள நிலவுபொழி
கந்தோத மொத்தமுக மும்பே ரருட்கணுமெ
விளநகையு மொளிகுலவு முனையயில்கொ ளுரமுநிலை
யின்பார்த டிக்கரமும் வெண்பூதி முற்றுமியல்
கவினிலவு வடிவுமியல் பரமசுக வுததியெதிர்
கண்டோரு ளத்திலரு ளும்பாத பற்பமுமெய்
திடவாராய்

சுகசொருப சலதியிடை பிரமனுத வியசதுரர்
துன்றூர்வ முற்றமிழ விண்டோய்வ டத்தினடி
மவுனரக சியகுறிகொள் கரதலமொ டமைகுரவர்
வண்டோய்பு விப்பதனு றுஞ்சேட னத்துபுகை
தொழவலிகொண் முயலகனெர் முதுகுநெரி தரவினிது
தொந்தோமெ னச்சபையி னின்றாடு மத்தர்மகிழ்
குமரேசா

சுவைமிகைகொ ளொருகவிதை புகல்புலவ னதுபிறகு
துங்காத ரக்குமரி தன்கோல முற்றணிகொ
டிரிபதகை நதிகுலவு நகர்வரையு மறுமதிதி
ரிந்தாட விட்டபரை யந்தாதி யிற்பெரிது
துதிசெய்பவன் மகிழவுறு குருவினியல் செவியினிடை
சொம்பார்கு ழைப்பணியை யிந்தாவ ரச்செயுமை
தருபாலா

அகமொடுறு புறநிலவு மலகிலுல கெவைகளினு
மண்டாவி முற்றுநக ரும்போக மிட்டருளி
யலைகுலவு மமுதசல தியிலரவின் மிசைதுயில்கொ
ளம்போரு கக்கணுள வம்போதி யொத்தவிர்மெ
யமையுநர கரிகருட துவசனற வுமிழுமல
ரைம்பாண னைத்தருமொர் மொய்ம்பார ரிக்கினிய
மருகோனே

அறுசமய நிலைமையுணர் சமரசமெய் தியதவர்க
ளன்போடு ரைத்திடுநி னின்பார்தி ருப்புகழை
மதுமழைபெய் திடுதருவில் வளர்கிளிகள் வினவியிசை
மங்காதி சைத்தருணை யெங்கோனெ னக்குலவு
மரவமம ரர்கள்செவிகொ டலர்பொழியு மகிமையின
லங்கார மிக்கமைகு ருந்தாச லத்தில்வளர்
பெருமாளே. (சுா)

தனத்ததந்த தனத்தானத் — தனதான.

முனைக்கண்மங்கை யருக்காவற் பெருகாதே
முதிர்ச்சிகொண்ட தமிழ்ப்பாடற் றெரகையாலே
உனைப்பணிந்து களித்தாடற் புரியேனே
உதிப்பிறந்த கதிப்பேறுற் றமையேனே
பனைக்கையும்பன் முகத்தானுக் கிளையோனே
பதித்தெனெஞ்ச மயற்றீர்பொற் பதநாதா
தினைப்புனங்கொள் குறக்கோதைக் கினியோனே
திருக்குருந்த வரைக்கோயிற் பெருமாளே. (எ)

தனந்தனனத் தனனத் — தனதான

பெரும்புளகக் களபத் தனைந்தசைவுற் றவிர்பொற்
பிறங்கனிகர்த் தகுசத் தினர்மாலே
பிறங்கிடுமச் சமயத் தினுங்கபடத் தொழிலிற்
பிணங்குரிமைக் குணம்வைத் துறுதியார்
தருங்கலவிக் கடலிற் படிந்தயர்துக் கமறத்
தணந்துனருட் கமலத் துணையேநோ்
சதங்கையொலிக் கழலுட் கலந்துவினைத் திமிரச்
சடங்கரைவுற் றமையப் புரிவாயே

திருந்துதமிழ்த் துதிசெப் பிடுந்தவர்சித் தமிசைத்
திகழ்ந்தநசைத் திரண்முற் றருள்வோனே
செழுங்கமலத் தயனுட் பொருந்துசெருக் கொழியச்
சினந்தவருட் பெருமைக் குமரேசா

குருந்திலெனக் கிருமைப் பயன்றரவுட் கனிவிற்
கொளுங்கருணைச் சுகமெய்க் குருநாதா
குயின்படிவுற் றினன்வெப் பொழிந்திடவுற் றதிருக்
குருந்தவரைக் குமரப் பெருமாளே. (அ)

தனந்தான தத்ததனதன — தனதான.

துறந்தாத ரத்தொடுனதரு
ணலம்பாடி யுட்கனிவுகொடு
தொழுஞ்சீல முற்றவடியவர் குழுவூடே
துதைந்தேவல் பற்றியுளமிசை
கணம்பேர்த லற்றவுயர்பர
சுகங்கூடி டற்குணசைபெறு மௌனமாயா

மறந்தோய்பு விக்கணிழிபொரு
ணிலங்காத விக்குமசடர்கண்
மனந்தோய்கு றிப்பின்வழிசெல விடல்சால்போ
மணஞ்சேர்த ருக்கொள்பொதியையி
லுறுந்தாப தற்குய்வகைபெற
மகிழ்ந்தோது மொப்பின்மறைபெறு பொருளீவாய்

சிறந்தூன மைத்துவழிபடு
திறம்பேசி யற்புலவனெதிர்
திகழ்ந்தார்வ முற்றவருள்புரி குமரேசா

திருந்தார்சி றைக்கணமைபவ
னிடம்பேசு மொப்பிலருண்மொழி
தினம்பார்துறக்க நுவல்வகை புரிவோனே

குறங்கூட மைத்தகரமிசை
துலங்கேர்ப டைத்தகுறிநிலை
கொளுந்தேசி கப்படிவொடென துளநேர்வாய்
குகுங்கூகு குக்குவெனவொலி
செயுங்கேத னத்தினடன்மலி
குருந்தாச லத்தின்மருவிய பெருமாளே. (கூ)

தனந்தத்த தத்ததத்த — தனதானு.

நிணம்பெற்ற சட்டகத்துன்
முயங்கிச்ச கத்தைமெச்சி
நிசஞ்சற்று ரைப்பதற்று மடவார்பால்
நெகிழ்ந்திச்சை பெற்றநித்த
சுகம்பற்று துற்பழக்க
நெடும்பித்த ருட்டவித்து மடியாதே

மணம்பெற்றி ருக்கினுச்சி
யதன்கட்ட வத்தருட்சின்
மயம்பெற்றி ருக்குமொப்பி லுனதாளே
வணங்கித்தி ருப்புகழ்ப்பெய்
தெனும்புட்க ரைத்துருக்கும்
வரம்பற்ற சிற்சுகத்தை யருள்வாயே

சுணங்குத்த னக்குறப்பெ
ணிடம்புக்கி ணக்கமிக்க
தொழும்புற்ற துத்தியச்சொல் பகர்வோனே

சுடுஞ்சொர்க்கம் வச்சிரக்கை
யினன்பெற்ற டிக்கணெட்டு
சுகம்பற்றி டச்செய்வெற்றி வடிவேலா

குணங்கெட்ட துற்குணற்குப்
விதஞ்சொற்ற ருட்கொள்பத்தர்
குலம்பற்று வப்பளித்த குருநாதா
கொடிஞ்சித்தி ரட்கள்சுற்று
நலங்தைக்க ணுற்றவொப்பில்
குருந்தப்பொ ருப்பிலுற்ற பெருமாளே. (கO)

தாத்தனந் தாந்ததத்த — தனதாண.

ஊற்றெழுந் தேன்படைத்த பூக்கரும் பேந்துதுட்ட
னேச்சநெஞ் சோய்ந்துநித்த முழலாதே
யூக்கிவன் றும்புதெற்கி லேற்றவன் றன்செலுத்து
மூற்றினேந் தேங்குதுக்க மணுகாதே
மாற்றமின் காந்தனுச்சி தீட்டிடுந் தீங்குமுற்ற
மாற்றியின் பாங்கதிக்க ணுறுமாறே
வாக்கின்மொய்ம் போங்குதத்தை பாற்கொளுந் தேங் [கருட்கண்
வாய்ப்பையென் பாங்கமைக்க நினைவாயே
காற்றளேந் தாஞ்சிறைக்கண் வாழ்க்கைகொண் டோய்ந்தவர்க் [கொர்
காத்தலஞ் சார்ந்துவக்க வருள்வோனே
காட்டிடம் போந்துவிற்கை வேட்டுவன் போன்றுவெற் [பர்
காத்தமின் கோங்கருப்பென் முலைதோய்வாய்

வேற்றடங் கூர்ங்கணர்க்குண் மாற்கொளுந் தீம்பனெற்கு
மேற்செலும் போங்களித்த குருநாதா
வேய்க்கணஞ் சூழ்ந்தவொப்பின் மாக்குருந் தாம்பொ.
[ருப்பின்
மேற்சிறந் தோங்குபத்தர் பெருமாளே. (கக)

*தன்னதனந்தா தனத்ததய்யன — தனதான.*

பொன்னேரெனுஞ்சீர் படைத்ததையலர்
கண்ணசுகம்போ ழவெய்த்துண்மல்கிய
பொய்ம்மாலடைந்தா குலித்துமெய்யறி விலனுயே
புண்மாவிலுந்தாழ் குணத்துவெய்யவ
னென்னுவுணர்ந்தோ ரிகழ்ச்சிசெய்யமெய்
புண்ணகிநொந்தே னெனக்குனல்லரு ளிடையேதோய்

என்னேரெனும்பான் மையுற்றகிள்ளையென்
மன்மேவுறும்பே ரருட்கணல்கினை
யிந்நாளினன்கா தரிக்கவொள்ளிய மயின்மீதே
யெண்ணருடம்பீர் தரச்செய்வையயின்
முன்னனகொண்டே வரற்குனுள்ளமு
ளெண்ணேரிரங்கா திருக்கைமெய்யருண் மரபேயோ

கன்னேர்மனஞ்சா லரக்கன்மெய்யினை
மின்னருமம்பால் விழச்செய்தல்லல்கொள்
கண்ணீர்விடுஞ்சீ தையைக்கொள்வல்லவன் மருகோனே
கண்ணயிரந்தோ யரிக்குணையிடர்
முன்னுடருஞ்சூர் முடித்துவெள்ளிய
கைம்மாவினன்கூர் சிறப்புவல்லையி லருள்வோனே

மின்னேர் தரும்பா முடற்குளேவர்க
டம்மால்வருந்தா திருக்கவெல்லினுள்
வின்னீடருந்தேசி கக்கொன்மெய்கொடு ளவிர்வோனே
மெய்ம்மா தவஞ்சால் சிறப்பர்வைகலு
முண்ணுடிடுஞ்சீ லமிக்கமைதரு
விண்ணூர்குருந்தா சலத்தில்வைகிய பெருமாளே. (கஉ)

முற்றிற்று.

---

## நூற்பயன்.

வெண்பா.

கோல மலிகுருந்தக் குன்றணியார் கோயில்பொலி
வேலமையும் ஞான விளக்கவுரப் — பாலமையுஞ்
சந்தப் பதிகமன்பிற் சாற்று மிசையடியார்க்
கெந்தப் பயனுமெய்து மே.

## வாழி விருத்தம்.

குருந்தமலே வாழியடி வாரந் தோயுங்
குஞ்சரமா முகன்வாழி கோயின் மீது
விருந்தனைய மெய்கொளருட் குமரன் வாழி
வேற்படையு மயிற்பரியும் விளங்கி வாழி
பொருந்தணியார் சிவபெருமா னுமையாள் வாழி
போற்றிடுமெய் யன்பர்சுகம் பொலிந்து வாழி
மருந்தனைய மொழிப்புலவோ ரினங்கள் வாழி
மாசறுநன் னலங்கண்முற்றும் வாழி வாழி.

**வேலு மயிலுந் துணே.**

## இந்நூலாசிரிய சுவாமிகள் இயற்றியுள்ள நூல்கள்.

---

### அச்சிட்டுள்ள பகுதிகள்.

பக்த மான்மியம்
சங்கராச்சாரியர் வைபவம்
வண்ணத்திரட்டு
மருதாசலப் பிரபந்தம்
பக்தமான்மிய சாரம்
கௌசைப்புராண பிரபந்தம்
அன்னியூர்த் தலபுராணம் தோத்திரத்திரட்டு
அவிநாசிப் பிரபந்தம்
வேற்கடவுள் மாலை சந்தம் வகுப்பு
இரத்தினசலப் பிரபந்தம்
இராமானந்த சுவாமிகள் பிள்ளைத் தமிழ்
ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ்
பேரூர் பச்சைநாயகிமாலை, பச்சைநாயகியம்மன்
பிள்ளைத் தமிழ், சந்தப்பதிகம்
ஷ்டி புராண சாரமாகிய பட்டிநாயகர் மாலை
ஷ்டி பல தெய்வ தோத்திரப் பதிகங்கள்
வெள்ளியங்கிரி சத்திநாயகர் மாலை பதிகம்
ஷ்டி விநாயகர் பதிகம்

### அச்சிடாத பகுதிகள்.

பேரூர்க் கோவை
ஷ்டி கலம்பகம்
ஷ்டி சிலேடை வெண்பா
பழநிமலைப் பிரபந்தம்
பத்திராசல ராமச்சந்திரன் பிள்ளைத் தமிழ்

கோயமுத்தூர்
கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்.